**காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டம் - சனவரி 01 முதல் 2021 ஒக்தோபர் 15 வரையிலான காலப்பகுதிக்கான**

---

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டத்தின் சனவரி 01 முதல் 2021 ஒக்தோபர் 15 வரையிலான காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திட்ட 2010 யூலை 31 ஆந் கடன் மற்றும் மானிய உடன்படிக்கையின் 4:09(ஆ) ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திட்ட 2014 யூலை 10 ஆந் திகதிய 5417 எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் 2 ஆம் அட்டவணையின் (II) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளுதம் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் விவசாய மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு, கால்நடைவள அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் கடல்நீர் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் தற்போதைய நீர்ப்பாசன அமைச்சு என்பன செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. காலநிலை ஆபத்தால் மக்கள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைத்தல் மற்றும் இடர்களை திறம்பட எதிர்த்து செயலாற்றுவதற்கான இயலளவை மேம்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 14,617 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 111.8 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 14,382 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 110 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 ஆகஸ்ட் 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருந்தபோதிலும் செயற்திட்டத்தின் பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதியானது 2021 ஒக்தோபர் 15 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

---

செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 ஒக்தோபர் 15 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான செலவினக்கூற்று மற்றும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஐந்து அமுலாக்கல் முகவர்களால் நான்கு பிரதான கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் ரூபா 11,830 பெறுமதியுடைய மூலதன வேலைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. 2021 ஒக்தோபர் 15 ஆம் திகதியன்று செயற்திட்டம் முடிவடைந்திருந்த போதிலும், அந்த 728 எண்ணிக்கையான கட்டுமான பணிகளுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு முறையாக கையளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஆகையால் மேற்குறிப்பிட்ட மூலதன சொத்துக்கள் தொடர்புடைய நிறுவனங்களின் நிலையான சொத்துக்களாக முறையாக கணக்கு வைக்கப்படுவதனை சான்றுறுதிப்படுத்த முடியாதுள்ளது. | முன்னேற்ற செயற் திட்டத்தின் (CRIP) மொத்த செயற்திட்ட செலவினம் திறைசேரி கணக்குகளின் கீழ் மூலதன செலவினமாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த பெறுமதியினை அமுலாக்கல் முகவர்களால் (IAs) மீண்டும் கணக்கிட வேண்டிய அவசியமில்லை. | செயற்திட்டத்தின் முடிவில் சொத்துக்கள் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்று பதிவேட்டினை பராமரிக்க வேண்டும். |
| (ஆ) | ரூபா 230.5 மில்லியன் மொத்த பொருட் கணிய சிட்டை (BOQ) பெறுமதியினை கொண்ட பதினைந்து ஒப்பந்த பொதிகள் 2015 முதல் 2017 வரையான காலப்பகுதியின் போது ரூபா 91.1 மில்லியன் தொகையினை கொடுப்பனவு செய்ததன் பின்னர் நிறுத்தப்பட்டன. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், தொடர்புடைய ஒப்பந்தகாரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதி வழங்கல்கள் 2021 ஒக்தோபர் 15 அன்று முடிவுறுத்தப்பட்டன மற்றும் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்வதற்கு மாற்று நிதி ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மீதமிருந்த வேலையின் ஒரு பகுதி ரூபா 1.25 மில்லியன் பெறுமதியைக் கொண்ட வருடாந்த பாதீட்டின் கீழ் 2021 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. மிகுதி வேலையினை MASL வருடாந்த பாதீட்டின் கீழ் எதிர்காலத்தில் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | உரிய தரப்பினர்களிடம் இருந்து சிக்கனமற்ற செலவுகளை மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கொழும்பு - இரத்தினபுரி வீதியில் இரண்டு பாலங்களை நிர்மாணிப்பு செய்வதற்காக ரூபா 225 மில்லியன் கிரயத்தில் 2017 பெப்ரவரி 17 அன்று உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது மற்றும் காணியினை உடமையாக்கல் செய்யாமல் செயற்திட்டத்தினால் முற்பணங்கள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. அதனை தொடர்ந்து தளத்திற்கான அணுகல் கிடைக்கப்பெறாமையினால் உடன்படிக்கை பரஸ்பரமாக நிறுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக, செயற்திட்டத்திற்கு ரூபா 71.3 மில்லியன் சிக்கனமற்ற செலவினமாக மாறியிருந்தது. | வீதி அபிவிருத்தி அதிகார சபை (RDA) இன் சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட காணிகளை கொள்வனவு செய்வதன் ஊடாக காணியினை உடமையாக்குவதற்கு எதிர்பார்த்து ஒப்பந்தம் வழங்கப்பட்டது. நெடுஞ்சாலைகள் அமைச்சினால் பின்பற்றப்படும் தற்போதைய விலை மதிப்பீட்டு முறையின் பிரகாரம், உச்ச கொள்வனவு விலையானது விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் | உரிய தரப்பினர்களிடம் இருந்து சிக்கனமற்ற செலவுகளை மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மதிப்பீட்டினை விட 10% சதவீதம் மாத்திரம் அதிகமானதாக இருக்க வேண்டும். இந்த காணிகள் A4 வீதியுடன் ஒட்டியதாக காணப்பட்ட போதிலும், இந்த காணிகளின் விலை மதிப்பீடு குறைவாக இருந்தது. ஏனெனில், இந்த காணிகள் கமநல திணைக்களத்தில் விவசாய காணியாக பட்டியல் படுத்தப்பட்டுள்ளன. எனவே, காணி உரிமையாளர்கள் விலை மதிப்பீட்டிற்கு உடன்படவில்லை மற்றும் சாதாரண காணி உடமையாக்கல் (LA) நடைமுறையினை பின்பற்றுவதற்கு நெடுஞ்சாலை அமைச்சு (MOH) தீர்மானித்தது. | |
| (ஈ) | பேசின் (Basin) முதலீட்டு திட்டத்தினை வரிசைப்படுத்துவதற்கான 1 ஆம் கூறின் கீழ் ரூபா 21.5 மில்லியன் தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் இறுதி வரையிலும், ரூபா 12.77 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் கிரய மதிப்பீடுகள் எடுகோள்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டன. இது செயற்திட்டத்திற்கு நன்மையாக இருந்தது மற்றும் சேமிப்புக்கள் ஏனைய கூறுகளிற்காக பயன்படுத்தப்பட்டது. | நிரல் முகவர்களுடன் (Line Agencies) முறையான ஒத்துழைப்பொன்று பேணப்படல் வேண்டும் மற்றும் கிரய மதிப்பீடுகள் சரியான திட்டமிடலின் அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். |